# ஒரு மந்திரவாதியின் மனமாற்றம் (8:5-24)

"மந்திரவாதி" என்ற வார்த்தையைக் கேட்கும்பொழுது நீங்கள் நினைப்பது என்ன? தொப்பியிலிருந்து முயல்கள் இழுக்கப்படுவதையா? ஒரு பெண் பாதியாக அறுக்கப்படுவதையா? பொருட்கள் அற்புதமாகத் தோன்றி, மறைவதையா? திறமையான மந்திரவாதி ஒருவரின் காட்சியை நீங்கள் எப்போதாவது கண்டிருந்தால், சில திகைப்புணர்வுகளைப் பெறுவதுடன், ஓரிரண்டு முறைகள் முட்டாளாக்கப்பட்டும் இருப்பீர்கள். இப்பாடம், பல திகைப்புணர்வுகளை அடைந்த ஒரு மந்திரவாதியைப் பற்றியதாகும்.

"ஒரு மந்திரவாதியின் மனமாற்றம்" என்பது நமது பாடத்தின் தலைப்பாகும். "மனமாற்றம்" என்ற வார்த்தை "மாற்றம்" என்பதையே குறிக்கின்றது. கிறிஸ்தவராவது என்பது ஒருவரது வாழ்க்கையில் ஏற்படக்கூடிய மிகப் பெரிய மாற்றமாகும். ஆயினும் அதற்குப் பிறகும் கூட அடிக்கடி பல மாற்றங்கள் தேவையாய் இருக்கிறது (லூக். 22:32). இப்பாடத்தில் நாம் பார்க்கப் போகின்றபடி, இந்த மந்திரவாதி ஒன்றுக்கு மேற்பட்ட "மனமாற்ற" பிரச்சனைகளைக் கொண்டிருந்தார்.

ஆண்டுகள் பலவாக, இம்மனிதரைப் பற்றி, ஏவப்பட்டிராத பல பராம்பரியக் கூற்றுகள் எழுந்துள்ளன, ஆனால் அடிப்படையில், வேதாகமம் இவரைப் பற்றிக் கூறுவது என்ன என்பதைப் பற்றியே நாம் கவனம் செலுத்தப் போகிறோம். நமது பாடம் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்படும்.

## விலகியிருந்த பாவி (8:5-11)

பிலிப்பு என்ற நற்செய்தியாளர் முதன்முறையாக கிறிஸ்துவைப் பற்றிச் சமாரியர்களுக்குப் பிரசங்கிக்கச் சென்ற நிகழ்ச்சியுடன் நமது பாடம் தொடங்குகின்றது (வ. 5). அவர் மீது

*அப்போஸ்தலர்கள் கைகளை வைத்திருந்தபடியால், அவரால் அற்புதங்கள் செய்ய முடிந்தது (வ. 6-8). அவர், தாம் தேவனிடத் திலிருந்து வந்தவர் என்பதை நிரூபிக்க அந்த அற்புதங்களைப் பயன்படுத்தினார். அப்போது, நமது மந்திரவாதி நமக்கு அறிமுக மாகிறார்:*

> *சீமோன் என்று பேர்கொண்ட ஒரு மனுஷன் அந்தப் பட்டணத்திலே மாயவித்தைக்காரனாயிருந்து, தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்தான். தேவனுடைய பெரி தான சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர், பெரியோர் யாவரும் அவனுக்குச் செவி கொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாய்த் தன்னுடைய மாய வித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப்பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள் (வ. 9-11).*

*இங்கே நமது மந்திரவாதி இருக்கிறார்: மந்திரவாதி சீமோன். சில சமயங்களில் இவர்* "Simon Magus" *அல்லது மாய வித்தைக் காரரான சீமோன் என்று அழைக்கப்படுகிறார். "மந்திரவாதம் செய்தல்" (அல்லது "மாய வித்தைக்காரனாயிருந்து";* KJV*) என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை mageuon என்பதாகும். இது நமது வார்த்தையாகிய "மந்திர வித்தை" என்பதோடு நெருங்கிய தொடர்புள்ளதாகும்.*

*அந்நாட்களில் மாயவித்தை என்பது ஒரு வித்தியாசப்பட்ட வியாபார வகையாய் இருந்தது. மேற்கத்திய உலகத்தில் இந்நாட்களில் மாயவித்தைகள் கேளிக்கைக்காகச் செய்யப் படுகின்றன; பொதுவாக மந்திரவாதிகள் தங்கள் மாய வித்தைகளை இயல்பான வழிமுறைகளிலேயே செய்வதாக ஒப்புக்கொள்கின்றனர். மந்திரவாதிகளின் இரகசியங்களைப் பற்றிக் கூறும் டஜன் கணக்கான நூல்கள் பல நூலகங்களில் உள்ளன, பல நகரங்களில் நீங்கள் "மாயவித்தை" செய்ய உதவும் புதுமையான பொருட்களை வாங்கக்கூடிய கடைகள் உள்ளன. ஆயினும், அந்த நாட்களில் மாயவித்தை என்பது மிகவும் வினயமான வியாபாரமாயிருந்தது. அதன் இரகசியங்கள் சுய நல நோக்கத்துடன் பாதுகாக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலருக்கு மட்டுமே அவைகள் போதிக்கப்பட்டன. பொதுவாக இந்த இரகசியங்கள் ஒரு குடும்பத்திற்குள்ளேயே பாதுகாத்து வைக்கப்பட்டு தலைமுறை தலைமுறையாகக்*

கற்றுத்தரப்பட்டன. தகப்பனின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் படியாக மகன்கள் சிறுவயது தொடங்கியே வளர்க்கப் பட்டனர். சில சமயங்களில் இளம் சிறுவர்கள் பெரிய கற்களை தங்கள் கக்கத்தில் நீண்ட நேரம் வைத்திருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அதன் மூலம் அவர்கள் கக்கங்கள் பெரிதாவதாகவும், அவர்களின் மந்திரவாதித் தகப்பனார்கள் எடுத்துக்காட்ட விரும்பும் வகையில் பல பொருட்களை அவைகளில் அவர்கள் மறைத்து வைக்க முடிவதாகவும் கருதப்பட்டது. அநேக வேளைகளில் இம்மாய வித்தைக்காரர் கள் (அல்லது மந்திரவாதிகள்) சில அற்புத சக்திகளால்தான் இவ்வித்தைகளைத் தாங்கள் செய்ய முடிவதாகப் பொய் யுரைப்பது கவலைக்குரியதாகும் - இந்த அற்புத சக்தி தேவ னோடு அல்லது குறைந்தது "ஏதோ ஒரு கடவுளோடு" இணைந் துள்ளதாக அவர்கள் கூறிக் கொள்கின்றனர். மாயவித்தைக் காரராகிய சீமோனும் இதையே செய்து கொண்டிருந்தார். நமது வேதபாடப் பகுதி, "தன்னை ஒரு பெரியவன் என்று சொல்லி" என்பதாகக் கூறுகிறது.

சீமோன் தன்னைப்பற்றிக் கூறிக்கொண்டது என்ன என்பதை நாம் மிகவும் சரியாக அறியவில்லை. இரேனியுஸ் (கி.பி. 120-195) என்ற பெயர்கொண்ட முற்காலக் கிறிஸ்தவ எழுத்தாளர் ஒருவர், சீமோன் தன்னையே தேவன் என்று, பெரிய கதையொன்றைச் சொல்லி வந்ததாகக் கூறினார். சீமோன், தான் ஒரு மாபெரும் சக்தியுடைய பெண்ணைப் படைத்ததாகவும், அப்பெண் இவ்வுலகத்தை உண்டாக்கி பிறகு அவளே மனித உருவெடுத்துக் கீழே வீழ்ந்ததாகவும், அந்தப் பெண்ணையும் இந்த உலகத்தில் தன்னை (சீமோனை) நம்பும் யாவரையும் மீட்பதற்காகத் தான் மனித உருவில் வந்ததாகவும் சீமோன் ஒரு கதை கூறியதாக எழுதியுள்ளார்.

சீமோன் கூறிய கதை எதுவாக இருப்பினும், அது மனதில் நன்றாகப் பதியக் கூடியதாய் இருந்திருக்க வேண்டும், மற்றும் நமது வேதப்பகுதியானது, "தேவனுடைய பெரிதான சக்தி இவன்தான்" என்று சமாரியர்கள் சீமோனிடம் கவனத்தைத் திருப்பியதாகக் கூறுவதால், சீமோன் ஒரு சிறந்த மாய வித்தைக்காரராகவும் இருந்திருக்க வேண்டும். சில வேளை களில், இன்றும்கூட மக்கள், தேவனுடைய வல்லமையால் தாங்கள் அற்புதங்கள் செய்வதாகக் கூறுகின்றனர், பலர்

அவர்களை நம்புகின்றனர். இந்தக் கூற்றுகள் பெரும்பாலும் திகைப்படையச் செய்யக் கூடியவைகளாயிருக்கின்றன. ஏனெனில், ''ஒரு அற்புதம் நடந்ததென்று நான் கேள்விப் பட்டேன்'' என்பது போன்ற சாட்சியங்கள் இவைகளுடன் இணைந்துள்ளன. குழப்பமடைந்த மக்கள், ''இம்மனிதர் தேவனுடைய வல்லமையினாலே அற்புதங்களைச் செய்வது உண்மையில்லையென்றால், இந்தச் சாட்சியங்கள் எப்படி வரக் கூடும்?'' என்று ஆச்சரியப்படுகின்றனர். சீமோன் செய்த அற்புதங்களுக்கு சமாரியாவிலிருந்த ஒவ்வொருவரும் "சாட்சி" அளித்தனர், ஆனால் அது எவைகளை நிரூபித்தது? மக்கள் எதை நம்புவதற்கு விரும்பினார்களோ, அதையே நம்பினார்கள் என்பதையே நிரூபித்தது.

சீமோன், "தானே தேவனுடைய பெரிதான சக்தி" என்று நினைத்தாரா என்று நான் அறியவில்லை. அப்படி அவர் நினைத் திருந்தால், அவர் தம்மையே ஏமாற்றிக் கொண்டவராய் இருந்திருப்பார், ஏனெனில் உண்மையில் அவர் இரட்சிப் படைய வேண்டிய ஒரு "பெரிய" பாவியாயிருந்தார்.

## மனமாற்றமடைதல் (8:5, 12, 13)

ஒரு மாய வித்தைக்காரராக சீமோன் தமது திறமையால் நன்கு செயல்பட்டிருக்கலாம், ஆனால் பிலிப்பு சமாரியாவுக்கு வந்து உண்மையான அற்புதங்கள் செய்யத் தொடங்கியபோது, சீமோனுடைய கைத்திறமையால் செய்யப்பட்ட வித்தைகள் யாவும் ஒன்றுமில்லாதவைகளாகிவிட்டன. சீமோன் தனது மாயவித்தைகளுக்கான ''உச்சாடனங்கள்'' சிலவற்றை (மந்திரவாதிகள் தாங்கள் கூறும் வார்த்தைகளை இவ்வாறு அழைக்கின்றனர்)க் கூறியிருக்கலாம், ஆனால் இவை யாவும், பிலிப்பு கூறிய தேவனுடைய செய்தியுடன் ஒப்பிட்டுப்பார்க்க இயலாதவைகளாயிருந்தன!

> அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான் (வ. 5).

> தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்

*நானம் பெற்றார்கள் (வ. 12).*

*சமாரியர்கள் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றபோது, அவர்கள் கிறிஸ்தவர்களானார்கள் (11:26), சபை உறுப்பினர் களானார்கள் (1 கொரி. 12:13, 27) மற்றும் இராஜ்யத்தின் குடிமக்களானார்கள் (யோவா. 3:5).*

*இவையாவற்றிற்கும் சீமோன் எவ்விதம் பதில் செயலாற் றினார்? முதலில் இது அவருக்கு இனிமையற்றதாய் இருந்திருக்கும் என்பதை நான் கற்பனை செய்கிறேன். சீமோ னிடம் பெரிய வல்லமைகள் இருந்ததாக மக்கள் எண்ணினர். அநேகமாக அவர் ஏராளமான காணிக்கைகளைப் பெற்றிருக்கக் கூடும். பிறகு, திடீரென்று வேறொருவர் வந்து, மக்களின் கவனம் யாவற்றையும் அவரிடமிருந்து திருப்பி விட்டார். அப். 13ல் எலிமா என்ற பெயருள்ள வேறொரு மந்திரவாதி தனது செல்வாக்குக்குப் பங்கம் நேர்வதாகக் காணப்பட்டபோது மனக் கலக்கமடைந்ததைப் பற்றிக் கூறுகிறது. அற்புதங்கள் செய்யக் கூடிய ஒரு மனிதரை எலிமா எதிர்த்து நின்று, கடைசியில் பார்வையை இழந்தார்! சீமோனும் இதே வழியில் சென்றிருக்கலாம், ஆனால் இவர் அப்படிச் செய்யவில்லை!*

*"சீமோன்" என்ற எபிரெயப்பெயர் "கேள்விப்படுதல்" என்று பொருள்படுகிறது (சில வேளைகளில், "கேள்விப்பட்டு ஏற்றுக் கொள்ளுதல்" என்றும் பொருள்படுகிறது). இந்த சீமோனுக்கு இது தகுதியான பெயராகவே இருந்தது. ஏனெனில் அவர் கவனித்துக் கற்றுக்கொள்ள விருப்பமுடையவராயிருந்தார். பிலிப்புவின் அற்புதங்கள் உண்மையானவைதானா என்று தீர்ப்பளிப்பதற்கு சீமோனைக் காட்டிலும் தகுதியானவர் வேறு யாரும் அங்கிருக்கவில்லை. அவர் தொழிலின் தந்திரங்கள் யாவையும் அறிந்தவர். ஆதாரங்களை எவ்விதம் பொய்யாக்க முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். அவர், கும்பலின் மனவியலை அறிந்திருந்தார். இவை யாவற்றையும் அறிந்த நிலையில், சீமோன், ''அவனால் (பிலிப்புவினால்) நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான்'' (வ. 13ஆ). ''பிரமித்தான்'' என்று இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையே வசனம் 9 மற்றும் 11 ஆகியவைகளிலும் உள்ளது, இந்த வார்த்தைகள் சீமோனின் தந்திரங்களைப் பார்த்த சமாரியா*

மக்களின் பதில்செயலைக் குறிக்கின்றது. பழைய பழமொழி ஒன்றைக் கூறுவதென்றால், செருப்பு இப்போது கால் மாறி விட்டது. கடந்த காலத்தில் மக்கள் மாய வித்தைகளைப் பார்த்து பிரமித்தார்கள்; இப்பொழுதோ மாயவித்தைக்காரர் உண்மை யான அற்புதங்களைப் பார்த்து பிரமித்தார்!

மாயவித்தைக்காரரின் தந்திரங்களுக்கும், உண்மையான ஒரு அற்புதத்திற்கும் இடையே பல வேறுபாடுகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, மாயவித்தைக்காரரின் வித்தைகள் யாவும் வழக்கமாக நடைமுறைப் பயன்கள் அற்றவையாக இருக்கும் அல்லது சிறிதளவே நடைமுறைப்பயன் இருக்கும். தொப்பி யிலிருந்து ஒரு முயலை வரவழைப்பது என்பது கேளிக்கைக் குரியதாயிருக்கும், ஆனால் அதன் நடைமுறைப் பயன் என்ன? (அந்தத் தொப்பியை சலவைக்குப் போடுவதன் மூலம் சலவைக்காரருக்கு ஒரு கூலி கிடைக்கும் என்பதைத் தவிர வேறு என்ன பயன் உள்ளது?) மாறாக, பிலிப்பு வந்தபோது, அவர் (பிலிப்பு) மக்களைக் குணப்படுத்தி, அவர்களை நலம்பெறச் செய்தார். தனக்கு அதிகமாகத் தெரிந்ததுபோல் நடிக்கும் சிலரை எனக்குத் தெரியும். அவர்கள் தங்களிடம் மாய வல்லமைகள் இருப்பதாகக் கூறிக் கொண்டு, கரண்டிகளை வளைத்து, கடிகாரங்களை நிறுத்துகின்றனர். உண்மையில் அவர்களிடம் மாய வல்லமை இருந்தால், அவர்கள் அயல் நாட்டுக் கொள்கை களை வளைத்து, யுத்தங்களை நிறுத்தியிருக்க முடியுமே!

பிலிப்புவின் அற்புதங்களைக் கண்டு, அவரது வார்த்தை களைக் கேட்டபோது அவரது செய்தி உண்மையானதென்று சீமோன் அறிந்தார். அச்செய்திக்குப் பதில் அளித்தவர்களின் வரிசையில் சீமோனும் சேர்ந்து கொண்டார். "அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்பைப் பற்றிக் கொண்டு" (வ. 13அ). சீமோன் உண்மையில் மனந் திரும்பவில்லை, ஆனால் அவர் வெறுமனே ஞானஸ்நானம் மட்டுமே பெற்றுக் கொண்டார் என்று மக்கள் அடிக்கடி கூறுகின்றனர். சீமோனின் பெயரைச் சுற்றியெழுந்த மனிதப் பாரம்பரியங்களிலிருந்தே இக்கருத்து பெறப்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் வேதாகமத்திலிருந்து மக்கள் இக்கருத் தைப் பெறமுடியாது. வேதவசனங்கள் "சீமோனும் விசு வாசித்து" என்றே கூறுகின்றன. வேறு வார்த்தைகளில் கூறுவ தென்றால், மற்ற சமாரியர்கள் செய்த அதே செயலையே

*சீமோனும் செய்தார். ''விசுவாசித்து'' என்பதற்குரிய மூல வார்த்தை இரு நிகழ்ச்சிகளிலும் ஒன்றாகவே உள்ளது. அவர் மனமாறவில்லையென்றால், சமாரியர்களும் மனமாறவில்லை யென்று பொருளாகி விடும். மேலும், அவர் "ஞானஸ்நானமும்" பெற்றார்; இதிலும் சீமோன் மற்றும் சமாரியர்கள் ஆகியோரைக் குறிப்பிட ஒரே வகையான வார்த்தையே பயன்படுத்தப் படுகிறது. இயேசு, ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்'' என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார் (மாற். 16:16அ). வேதாகமத்தின்படி, மாய வித்தைக்காரராயிருந்த சீமோன், இரட்சிக்கப்பட்ட சீமோன் ஆனார். அவரது வாழ்க்கையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது; அவர் மனந்திரும்பியிருந்தார்.*

*ஆயினும் இத்துடன் இவ்வரலாறு முடிவடையவில்லை.*

## *தவறு செய்கிற பிள்ளை (8:14-19, 23)*

*சமாரியாவில் தேவ வசனம் பரவியிருந்தது என்பதை எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டபோது, புதிய கிறிஸ்தவர்கள் அற்புத வரங்களைப் பெற்றுக் கொள்ளும் படியாக அவர்கள்மேல் கைகளை வைப்பதற்காக பேதுருவை யும் யோவானையும் அங்கு அனுப்பி வைத்தார்கள் (வ. 14-17). சபையின் தொடக்க நாட்களில், புதிய ஏற்பாடானது எழுதி முடிக்கப்படும் வரையிலும், மக்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறிந்து கொள்வதற்கு இப்படிப்பட்ட செயல் நடைமுறைப்படுத்தப்பட்டது. (அப்போஸ்தலர்களின் கைகளி னால் இந்த வரத்தைப் பெற்ற-பிலிப்பு போன்ற மற்றவர்கள் இவ்வரங்களை வேறோருவருக்கு அளிக்க முடியாதிருந்தது என்பதை இங்கு கவனிக்க வேண்டும். அப்போஸ்தலர்களின் கைகளினாலேயே இவ்வரங்கள் தரப்பட்டன [வ. 18]. அப்போஸ்தலர்கள் யாவரும் இறந்து போனபொழுது, இப்படிப்பட்ட வரங்களைப் பெறுவதும் ஒழிந்து போயிற்று.)*

*புதிய கிறிஸ்தவர்கள்மேல் அப்போஸ்தலர்கள் தங்கள் கைகளை வைத்தபோது, அவர்களில் மிகவும் கீழான நிலையில் இருந்தவர்கள்கூட, சீமோன் கடந்த காலத்தில் செய்திருந்தவை களைப் பார்க்கிலும் பெரிய அற்புதங்களைச் செய்ய முடிந்தது. அவ்வாறு நடந்தபோது, சீமோன் தனது நடக்கையிலிருந்த*

அடிப்படைப் பிரச்சனையை வெளிப்படுத்தினார். ஞானஸ் நானம் பெறுவதற்கு முன்பு நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டியது (2:38) அவசியமாகும், அவ்வாறு மனந்திரும்பிய பின்னரும் நீங்கள் அதே ஆளாகவே இருக்கிறீர்கள் - தேவனுடைய உதவியினால் நீங்கள் உங்கள் வாழ்க்கை முழுவதிலும் மாற்றங்களுக்காகச் செயல்பட வேண்டும். சீமோனின் விஷயத்தில், "தேவனுடைய பெரிதான வல்லமை" என்ற எண்ணத்திலிருந்து, கூட்டத்தில் தானும் ஒருவர் என்ற நிலைக்கு அவர் மாறுவது என்பது ஓரிரவில் சரி செய்யப்படக் கூடியதாயிருக்கவில்லை. சீமோன் தனது நோக்கத்தைப் பரிசீலனை செய்வதில் குறிப்பிடத்தக்கவாறு முயற்சி செய்து கொண்டிருக்கையில், மறுபடியும் ஒரு பெரிய வனாகக்கூடிய வாய்ப்பு ஒன்றை அவர் கண்டதால், சோதனை அவரை மேற்கொண்டது.

> அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள் மேல் வைத்ததினால் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டு வந்து: "நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்க வேண்டும்" என்றான் (வ. 18, 19).

நான் இளைஞனாக இருந்தபோது, உண்மையான அற்புதங்கள் செய்யும் வரத்தை மட்டுமே சீமோன் விரும்பிய தாக எண்ணினேன். (மேடைமேல் வித்தை செய்கின்ற போதெல் லாம், ஒருவேளையில்லாவிட்டால் மற்றொரு வேளையில், மாய வித்தைக்காரர், "நான் செய்வதாக நடிக்கும் இச்செயல்கள் யாவற்றையும் உண்மையிலேயே செய்ய முடிந்தால் எப்படி யிருக்கும்!" என்று பகல் கனவு காண்கின்றனர் என்றே நான் எண்ணுகின்றேன்.) ஆயினும், சீமோன் இதைக் காட்டிலும் அதிகமானதை விரும்பினார். அவர் பிலிப்பு அல்லது சமாரியா வில் இருந்த மற்ற கிறிஸ்தவர்களைப்போல் இருப்பதை விரும்ப வில்லை. அவர் உச்சிக்குச் செல்ல விரும்பினார்; அவர் அப்போஸ்தலர்களைப் போலாக விரும்பினார்! அப்போஸ்தலர் களைப்போல மற்றவர்கள்மேல் கைகளை வைக்கும் வரத்தைப் பெற அவர் விரும்பினார். அதன் மூலமாக அவர், தாம் விரும்புகின்ற யாவருக்கும் அற்புத வரங்களைக் கொடுக்க விரும்பினார்.

*சீமோன் இந்த வரத்தை விரும்பியதற்கான காரணங்களை நான் அறியவில்லை, ஆனால் இப்படிப்பட்ட வரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுவதை எண்ணுவது பயப்படுத்துவ தாய் உள்ளது. ஜாக்கிரதையற்ற செயல்பாடுடையவர் ஒருவர், "உங்கள் வெள்ளியையோ அல்லது தங்கத்தையோ எனக்குத் தாருங்கள், நான் உங்களுக்கு உண்மையான அற்புதங்கள் செய்யும் வரத்தைத் தருவேன்" என்று கூறுவதை ஒருவர் கற்பனை செய்து பார்க்க முடியும். ஒருவேளை சீமோனின் இருதயத்தில் இவ்வித எண்ணம் இல்லாமல் இருக்கலாம், ஆனாலும் சீமோன் "கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருந்ததாக" பேதுரு கூறினார் (வ. 23).*

*திருத்தப்பட்ட ஆங்கில வேதாகமத்தில், "கசப்பான பிச்சும் பாவக்கட்டுமே உனது முடிவாகும்!"[1] என்று உள்ளது. "கசப் பான பிச்சு" என்பது எபிரெய விளக்கத்தில் "மிக அதிகமான கசப்பு"[2] என்று பொருள்படும். சமுதாயத்தில் "ஒன்றுமற்றவர்" என்றிருப்பதை சீமோன் கடினமானதாகக் கண்டிருக்க வேண்டும்; அவரது இருதயத்தை கசப்பானது விஷமாக்கிக் கொண்டிருந்தது. மேலும், அவர் "பாவக்கட்டில்" இருந்தார். பாவம் அடிமைப்படுத்தியது! நாம் கிறிஸ்தவர்களாகின்றபோது பாவத்தின் விலங்கு முறித்து எறியப்பட்டது (ரோமர் 6:17, 18). ஆயினும், நாம் பாவத்திற்கு மறுபடியும் திரும்பி, மீண்டும் ஒருமுறை அடிமையாகிவிடவும் வாய்ப்புகள் உண்டு!*

*ஒரு நபர் கிறிஸ்தவரான பிறகு, மறுபடியும் அவர் விழுந்து போகவே முடியாது என்று சிலர் போதிக்கின்றனர், ஆனால் பவுல், தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையையும், "இப்படி யிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாத படிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" என்று எச்சரிக்கை செய்தார் (1 கொரி. 10:12). சீமோன் எச்சரிக்கையாயிருக்க வில்லை; அவர் விழுந்துவிட்டார். தாம் பெற்றுக்கொண்ட எல்லாவற்றையும் அவர் இழக்கும் தறுவாயிலிருந்தார்; அவர் இழந்துபோகப்படக்கூடிய அபாயத்தில் இருந்தார்!*

*இப்பாடத்தின் முதல் பகுதிக்கு "விலகியிருந்த பாவி" என்று நான் தலைப்பிட்டேன், ஏனெனில் சீமோன் "விலகியிருந்த" நிலையிலேயே தொடங்கினார், கர்த்தருக்குள் இரட்சிப் படைந்த உறவு இல்லாத நிலையிலேயே அவர் தொடங்கினார் (எபே. 2:12). இப்பகுதியானது "தவறு செய்கிற பிள்ளை" என்று*

தலைப்பிடப்பட்டுள்ளது, ஏனெனில் தேவனோடு சீமோன் கொண்டிருந்த உறவானது மாற்றமடைந்தது. இப்பொழுது அவர் விலகினவரல்ல; மாறாக தேவனுடைய பிள்ளையாகவே இருந்தார் - ஆனால் தவறு செய்கிற பிள்ளையாயிருந்தார். மீண்டும் ஒருமுறை சீமோன் மனமாற்றம் (மாற்றம்) அடையத் தேவையாய் இருந்தது (யாக். 5:19, 20). மறுபடியும் கட்டியெழுப்பப்படுவதை அவர் அறிவது தேவையாயிருந்தது.

## முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வரப்படுதல் (8:22, 24)

கிறிஸ்தவராகும் செயற்பாங்கை வேதாகமம் "புதிய பிறப்பு" என்கிறது (யோவா. 3:3-5). ஒருவர் மறுபடி பிறந்த பிறகு, அதே செயற்பாங்கைத் திரும்பச் செய்வதில்லை. அவர் எப்பொழுதுமே ஒரு பிள்ளையாகவே இருக்கிறார். இருப்பினும் ஒரு பிள்ளை தனது குடும்பத்தின் ஆதரவினின்று விழுந்துபோகக் கூடும். தேவனுடைய பிள்ளை தனது தகப்பன் மற்றும் குடும்பத்துடன் நல்லாதரவுக்கு மீண்டும் எவ்விதமாய்க் கொண்டு வரப்பட முடியும்?

சீமோனைக் கடுமையாகக் கடிந்து கொண்ட பிறகு, பேதுரு, "ஆகையால் நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்" என்று கூறினார் (வ. 22). "மனந்திரும்பி" மற்றும் "வேண்டிக்கொள்" என்ற பேதுருவின் வார்த்தைகளில், தேவனுடைய பிள்ளையாயிருந்தும் தவறு செய்கிற ஒருவர் தேவனிடத்தில் திரும்பக்கூடிய வழியானது புறக்கோடிட்டுக் காட்டப்படுகிறது. இது, "மன்னிப்பின் இரண்டாவது விதியாகும் (சட்டமாகும்)." விசுவாசித்து,[3] மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் (2:38; 16:31-34; 22:16) என்று விலகியுள்ள பாவிகளுக்குக் கூறப்படுவது "மன்னிப்பின் முதலாவது விதியாகும் (சட்டமாகும்)." "மன்னிப்பின் இரண்டாவது விதி (சட்டம்)" என்பது பாவம் செய்யும் கிறிஸ்தவர்களுக்கானது.[4] தேவனுடைய பிள்ளைகளாயிருக்கையில் நாம் பாவம் செய்கின்றபொழுது, நாம் மனந்திரும்ப வேண்டும் - பாவத்தைப் பற்றிய "நமது நடக்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்" மற்றும்

தேவனுடைய உதவியுடன் நாம் பாவத்தைக் கைவிட முடிவு செய்ய வேண்டும் என்று நமக்கு முதலாவதாகக் கூறப்படுகிறது. நமது இருதயம் நொறுங்கி, நமது தீர்மானம் உறுதியான பிறகுதான் நாம் தேவனிடத்தில் மன்னிப்பிற்காக ஜெபம் பண்ண முடியும். மனந்திரும்புதலும், ஜெபம் செய்தலும் மட்டுமே சீமோனுக்கு உதவக்கூடியவைகளாயிருந்தன.

சீமோன் அசைக்கப்பட்டார். அவர் பேதுருவிடம், "நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (வ. 24). மேற்கத்திய வசனத்தில், சீமோன் தொடர்ச்சியாக அழுது, பேதுருவையும் யோவானையும் தனக்காக ஜெபிக்கும் படிக் கேட்டுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. சீமோன் தனது தேவையை ஒப்புக்கொண்டு, பேதுரு மற்றும் யோவான் ஆகியோரைத் தனக்காக ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார். நாம் ஒருவருக்கொருவர் நமது பாவங்களை அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க வேண்டும் என்று யாக். 5:16ல் கூறப்படுகிறது. 1 யோவா. 1:9ல், "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" என்று குறிப்பிடப் படுகிறது.

## முடிவுரை

சீமோனுக்கு என்னவாயிற்று? நான் அதை அறியவில்லை, பின்வந்த நூற்றாண்டுகளில் அவரைப் பற்றி அதிகமாய் எழுதப்பட்டது, ஆனால் கட்டுக் கதையிலிருந்து உண்மையைப் பிரித்தரிவது முடியாத ஒன்றாயுள்ளது. அவரைப் பற்றி நாம் உண்மையில் அறிவது எல்லாம் அப். 8ல் காணப்படுகிறது. வசனம் 24ல் அவரது பகுதியில் ஒரு உண்மையான மாற்றம் ஏற்பட்டதென்று குறிப்பிடுவதாகவும், அவர் தமது திறமை களை கர்த்தருக்கெதிராக அல்ல, கர்த்தருக்கென்றே பயன் படுத்தினார் என்றும் எண்ணவே நான் விரும்புகிறேன். அவரது நித்திய அடைவிடம் எதுவாயிருப்பினும், அவர் அவரது வாய்ப்பைப் பெற்றிருந்தார் - பிலிப்புவின் பிரசங்கத்தின் மூலம் அவர் கர்த்தரைச் சந்தித்தார், சரியான பாதையில் அவர் செல்லத்

தொடங்கினார்.

சில காலங்களுக்கு முன், இந்த சீமோனைப் போலவே நவீன கால மாயவித்தைக்காரர் ஒருவர் இயேசுவைப் பற்றி முடிவெடுக்க நேர்ந்ததை நான் அறியக்கூடிய வாய்ப்பைப் பெற்றேன். நமது காலத்தில் மிகப் பெரிய மாயத் தோற்றக்காரரான ஆன்டர் கோல் என்பவரே அவர். பதினைந்து ஆண்டுகளாக இந்த ஆன்டர் கோல் என்பவர் ஒரு தொழில் முறை மாயவித்தைக் காரராக இருந்தவர். அவர் மிகப் பெரும் வெற்றியடைந் திருந்தார். ஆனாலும் ஏதோவொன்று அவரிடத்தில் குறைவாயிருந்தது. அவர், "எனது வாழ்க்கையில் ஏதோ குறைபாடு உள்ளதென்று நான் அறிந்தேன். அநேக இரவுகளில் காட்சி முடிந்த பின் எனது உடை மாற்றும் அறையில் இருக்கையில், 'எனது வாழ்வில் நினைத்திருந்த ஒவ்வொன்றையும் நான் நிறைவேற்றியுள்ளேன், இன்னும் எனது வாழ்க்கையில் வெறுமை காணப்படுகிறதே' என்று நான் எண்ணுவதுண்டு" என்று கூறினார். மிகச் சிறந்த வகையில் விளங்கின இரண்டு சக தோழர்கள் (மாயவித்தைக்காரர்கள்) தற்கொலை செய்து கொண்ட போது, அவர், "நான் ஏன் இங்கு இருக்கிறேன்? நான் எங்கு செல்கிறேன்? எனது வாழ்க்கையின் நோக்கம் என்ன?" என்பது போன்ற அடிப்படைக் கேள்விகளைக் கேட்டுக் கொள்ளத் தொடங்கினார். நிறைவாக, ஒரு மாயவித்தைக் காரரின் கண்ணோட்டத்தில் கிறிஸ்துவின் அற்புதங்களை ஆய்வு செய்யும்படி அவருக்கு அறைகூவல் விடப்பட்டது. அவர் பின்வருவனவற்றை எழுதினார்:

> தத்துவப் பின்னணியும், அரிசோனா மாநிலப் பல்கலைக் கழகத்திலிருந்து உளவியலில் பட்டமும் பெற்று ஒரு மாயவித்தைக்காரனாக இருந்த நான் மிகவும் தேவபக்தியற்றவனாயிருந்தேன். இயேசு தம்மை தேவனென்று கூறிக் கொண்டதை அறியுமளவுக்கு நான் வேதாகமத்தைப் போதுமான அளவு படித்துள்ளேன். ஒன்று அவர் பொய்யராகவோ, பைத்தியமாகவோ இருக்க வேண்டும், அல்லது அவர், தாமே கூறியபடி கர்த்தரும் தேவனுமாயிருக்க வேண்டும்.
>
> ஆகவே ஒரு மாயவித்தைக்காரரின் கண்ணோட்டத்தில் நான் கிறிஸ்துவின் அற்புதங்களைப் பற்றிப் படிக்க ஆரம்பித்தேன். பாருங்கள், ஒரு புத்திசாலியான மாயவித்தைக்காரரால் ஒரு விஞ்ஞானியையோ, ஒரு பேராசிரியரையோ, ஒரு இறையியலாளரையோ அல்லது வேறு எவரொருவரையுமோ

முட்டாளாக்குவது எவ்வளவு எளிதென்று நான் அறிவேன். நாங்கள் எங்கள் வித்தைகளைக் காண வருபவர்களை முட்டாளாக்கப் பயன்படுத்தும் உளவியலையோ அல்லது செய்முறைகளையோ அவர்கள் புரிந்து கொள்வதில்லை. கிறிஸ்துவின் அற்புதங்களை ஆய்வு செய்ய அவர்கள் தகுதி பெற்றவர்களல்ல என்று தெளிவாகவே நான் உணர்ந்தேன். மாறாக, என்னுடைய புகழிலும், மாயவித்தைக்காரன் என்று நிரூபிக்கப்பட்ட எனது திறமையிலும் நான் மிகவும் பெருமை யுடனிருந்தேன். நான் என்றைக்குமே வேறொரு மாயவித்தைக் காரரால் முட்டாளாக்கப்பட்டதில்லை. எனவே இயேசு என்ற இந்த முதல் நூற்றாண்டு மனிதர் எத்தராயிருந்தால், அவரால் வஞ்சிக்கப்பட எனக்கு எள்ளளவும் விருப்பமில்லை.

இயேசு கிறிஸ்துவின் உயர்த்தெழுதலைப் பற்றியும், அவரது மற்ற அற்புதங்களைப் பற்றியும் உள்ள ஆதாரங்களை பல மாதங்களாக நான் ஆராய்ச்சி செய்த பிறகு, மெஸ்மரிசம், ஹிப்னாட்டிசம் அல்லது வேறு எவ்விதமான வஞ்சிக்கும் முறைகளும் அதில் இல்லையென்றே நான் முடிவு செய்தேன். இயேசு கிறிஸ்து தம்மைப் பற்றிக் கூறியவைகளை நான் எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாமற் போயிற்று.

இம்மாயவித்தைக்காரர், இயேசு மற்றும் அவரது அப்போஸ் தலர்கள் உபதேசித்தவைகளைப் பற்றி மேலும் தொடர்ந்து படித்தார். பிறகு, அவரது கூற்றுப்படியே, அவர் "அவர்கள் கூறியவற்றை ஒரு அறிவியல் ஆய்வுக்குட்படுத்தினார்." முடிவாக அவர் தமது சாட்சியத்தை, "இது எந்த ஒரு மனிதரும் எடுக்கக் கூடிய மாபெரும் முடிவாகும். எனது நண்பர் ஒருவர் ஒருமுறை என்னிடம், "ஆன்டர், நீ வாழ்வில் இப்படியே போய்க் கொண்டிருக்கையில், கிறிஸ்துவை நீ தவற விட்டு விட்டால், நீ எல்லாவற்றையுமே தவற விட்டவனாகி விடுவாய் என்று கூறியது மிகவும் சரியானதேயாகும்" என்று கூறுவதன் மூலம் மெய்ப்பித்தார்.

இப்பாடத்தில் மாயவித்தைக்காரர்களைப் பற்றியே நான் அதிகமாய்ப் பேசியுள்ளேன், ஆனால் மாயவித்தைக்காரர் களைப் பற்றி நான் கூறியது உங்களுக்கும் உண்மையான தாகவே உள்ளது. நீங்கள் செய்யும் நற்செயல்கள் மூலமாக மட்டுமே, இயேசுவின் உதவியின்றியே உங்களை இரட்சித்துக் கொள்ள முடியும் என்று நீங்கள் எண்ணினால், அது ஒரு மாயவித்தைக்காரர் தனது வித்தைகளைப் பார்ப்பவர்களை முட்டாள்களாக்குவது போல, உங்களை நீங்களே ஏமாற்றிக்

கொள்வதாகும்; இயேசு இல்லாமல் உங்களால் இரட்சிக்கப் பட முடியாது (ரோமர் 3:23; 6:23)! நீங்கள் கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்த, (தண்ணீரில் மூழ்கும்) ஞானஸ்நானம் பெறாதிருந்தால், அதை உடனே பெற வேண்டியது அவசியமாகும். சீமோனைப் போல நீங்கள் விழுந்துபோயிருந்தால், மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஜெபித்து தேவனிடத்தில் திரும்பி வரத் தைரியப்படுங்கள். ஒவ்வொரு நாளுமே "மாயப்" பண்புகள் நிறைந்திருப்பதை அப்போது நீங்கள் காண்பீர்கள்!

## காட்சி-உதவிக் குறிப்புகள்

இப்பாடத்தின் நான்கு முக்கியக் கருத்துக்களைச் சுருக்கிக் கூறுவதற்கு நான் பிளானல் போர்டில் விளக்க படங்களுடன் அக்குறிப்புகளைக் காட்டுவதுண்டு. அது 117ம் பக்கத்தில் உள்ள படத்தைப் போன்றதாயிருக்கும். இவ்விளக்கமானது பெரிய அளவில் கரும்பலகையிலோ அல்லது படக்காட்சி எந்திரத்தின் மூலமாகவோ கூட காட்டப்படலாம்.

புகழ் பெற்ற வியாபார விளம்பரக் காட்சியொன்றில் சலவை செய்யப்பட்ட துணியொன்று (போட்டி விற்பனைப் பொருளை விளம்பரப்படுத்துவதற்காக) காட்டப்படுகிறது. இத்துணியானது (குறிப்பிட்ட கம்பெனியாரின் சலவைத் தூளினால் சலவை செய்யப்பட்ட) உண்மையில் சுத்தமான துணியொன்றை இதன் அருகில் வைக்கும் வரையில் சுத்த மாகவும், வெண்மையாகவும் தெரிகிறது. பிறகு அம்முதல் துணி யானது மங்கலாகவும் பாதி வெண்மையாகவும் காணப் படுகிறது. அதே போன்றுதான், சீமோனின் தந்திர வேலைகளுக் கருகில் உண்மையான அற்புதங்கள் நிகழ்த்தப்பட்டபோது, மக்கள் வித்தியாசத்தை உணர்ந்து கர்த்தரிடம் திரும்பினார்கள். ஏறக்குறை வெண்மையான துணியொன்றையும், உண்மை யிலேயே வெண்மையான துணியொன்றையும் வைத்து நீங்கள் இந்த விளக்கத்தைப் பயன்படுத்த முடியும்.

"மன்னிப்பின் இரண்டு விதிகளை (சட்டங்களை)" நீங்கள் வலியுறுத்த விரும்பலாம். உங்கள் கரும்பலகையின் மேற் பகுதியில் இடதுபுறம் "விலகியிருக்கும் பாவி" என்றும் வலது

புறம் "தவறு செய்கின்ற கிறிஸ்தவர்" என்றும் எழுதுங்கள். இத்தலைப்புகளின் கீழ், ஒவ்வொன்றிலும் மன்னிப்புப் பெறத் தேவையானவைகளை எழுதுங்கள். விலகியிருந்த பாவி ஜெபிக்கும்படிக் கூறப்படவில்லையென்பதையும், கிறிஸ்தவர்கள் மறுபடியும் ஞானஸ்நானம் பெறும்படி கூறப்படவில்லையென்பதையும் குறிப்பிடுங்கள்.

---

குறிப்புகள்

[1]*அவர் "கசப்பான பிச்சில்" (எதிர்கால வினைச் சொல் பயன்பட்டுள்ளது) அகப்படக் கூடிய அபாயத்தில் இருந்தார்.* [2]*பிச்சு ("பித்தப்பையில்" உள்ளது போன்ற) ஒரு கசப்பான திரவம் ஆகும். இவ்விதமாக இவ்விளக்கம் "கசப்பான கசப்பில்" என்று பொருள்படுகிறது. எபிரெயப் பயன்பாட்டில் இது "மாபெரும் கசப்பு" என்று பொருள்படுகிறது.* [3]*விசுவாசம் என்பது தாம் விசுவாசிப்பதை அறிக்கையிடும் விருப்பத்தையும் உள்ளடக்கியுள்ளது (8:37 க்கான குறிப்புகளைக் காணவும்).* [4]*நாமகரணக் கூட்டங்களின் உலகில் இவ்விரண்டையும் குழப்பிக் கொள்கின்றனர், அவர்கள் விலகியிருக்கும் பாவியை, மன்னிப்புக்காக ஜெபித்துக் கொள்ளும்படி கூறுகின்றனர்.*